அதிசயங்கள் செய்கிறவர்
நம் அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர்
இயேசு நமக்குள் வசிக்கிறார்

1. தண்ணீரை இரத்தமாய்
மாற்றினார் அதிசயம் -எகிப்தின்
வெறும் தண்ணீரை திராட்சை
இரசமாய் மாற்றினார் அற்புதம்

2. குருடருக்கும் செவிடருக்கும்
சுகம் தந்தார் அதிசயம் -பிறவி
ஒரு சொல்லாலே மரித்தோரை
எழுப்பினார் அற்புதம்

3. பாவியான என்னையுமே
மாற்றினார் அதிசயம் -
இந்த ஏழை என்மீது
நேசக்கரம் நீட்டினார் அற்புதம்